சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1 தங்கமணி, த/பெ. சன்முக முதலியார், வயது.63

**<u>சாட்சி ஆஜர். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.–</u>**

என்னுடைய வாகனம் ராஜான் ஜீஸ் பார் முன்பு சென்றுக்கொண்டிருந்த போது போலிசார் ஜீப் நின்றுக்கொண்டிருந்தது, அதிலிருந்து வெளியே வந்த 4 போலிசார்கள் என்னையும் எனக்கு முன்பு சென்றுக்கொண்டிருந்த 2 ஆட்டோக்களையும் நிறுத்தினார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியவில்லை. என்னுடைய ஆட்டோவிலிருந்து சாவியை எடுத்த போலிசாரின் பெயர் சந்திரசேகர் ஆவார். என் சாவியை எடுத்தபோது பொதுமக்கள் பார்த்தார்கள், அங்கிருந்த சிசிடிவி கேமாராவிலும் அது பதிவானது. சி.சி.112/2015 என்ற வழக்கில் பாலாஜி என்பவர் நிகல்நிலை புகார்தாரர், சின்னதம்பி என்பவர் புலன் விசாரணை அதிகாரி ஆவார். 1ம் எதிரி ராணி என்பவர் திருப்பத்துர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சம்பவத்தின் போது பணியிலிருந்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2016 ம் வருடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2023 ல் தான் என்னை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தேன் என்றால் சரிதான், எதிரிகள் வழக்கில் ஆஜராகதாதால் என்னை விசாரிக்க இயலவில்லை. நான் சொல்வது தவறு என்றும், எதிரிகளிடம் பணம் கேட்டேன் என்றும், அதை கொடுத்தால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளவதாக நான் தற்போது வரை மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல, வழக்கில் அவர்களை ஆஜர் படுத்துமாறு பலமுறை மனு தாக்கல் செய்துள்ளேன். காவல் துறை, வருவாய் துறை ஆகியோர்களின் மீது புகார் அனுப்பவது எனக்கு வழக்கம் என்றும், அதன் மூலம் எனது தேவையை நான் தீர்த்துக்கொள்வேன் என்றால் சரியல்ல. நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்யவில்லை என்றும், 2 ஆட்டோகாரர்களுக்காக நான் வழியே சென்று பிரச்சனை செய்ததால் என் மீது மேற்கண்ட வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலிசாரை பணி செய்ய விடாமல் தடுத்தேன் என்றும், என்னை கைது செய்யும் ஒத்துழைப்பு கொடுக்காமல் வீண் பிரச்சனை செய்து, அப்போது ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகளின் உயர் அதிகாரிகள் யாரேனும் விசாரித்தேனா என்றால் இல்லை, என்னை சிறையில் அடைத்துவிட்டார்கள். 3 எதிரிகள் என்னை

கையாலும், லத்தியாலும் தாக்கியதாகவும், அசிங்கமான வார்ததை கொண்டு திட்டியதாகவும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, கண்காணிப்பு கேமாராவில் அந்த நிகழ்ச்சிகள் பதிவாகியுள்ளது. மேற்கண்ட வழக்கு என் மீது தாக்கல் செய்துள்ளதால் அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த வழக்கை இழுத்து அடித்துக்கொண்டு வருகிறேன் என்றால் சரியல்ல. நான்மகளிர் காவல் நிலையத்தில் அவ்வபோது சென்று பஞ்சாயித்து செய்தபோது எனக்கு சாதகமாக 1ம் எதிரி செயல்ப்படாததால் அவரையும் இந்த வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of witness.